AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 5

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்



இணையதளம் வாயிலாக மாதம் இரு முறை வெளிவரும்

## எண்கண் முருகன் ஆலயம்

- நவம்பர் மாத ராசிபலன்கள்
- பெயர் எண்களின் சிறப்பு
- சித்தர் பூமி
- தீபாவளியின் சிறப்பு

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 95004 95008, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பது முதுமொழி சிரசு என்பது தலையைக் குறிப்பது. தலை என்றால் இங்கே தலையில் உள்ள முளையைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். ஒரு மரம் உயிருடன் உயர்ந்து விரிந்து நிற்க வேர் எவ்வளவு அவசியமோ அதேபோல மனிதன் உயர்ந்து, உயிர்ப்புடன் விளங்க மூளை மிகமிக அவசியமானது. இதனாலேயே மனிதனை தலைக்கீழாக நிற்கும் மரம் என்று கூறுவதுண்டு அதேப்போல மூளை சரியாக இயங்காத போது தான் மனிதனிடம் குழப்பம், நோய், என்பது போன்ற சிரமங்கள் ஏற்படும் அந்த மனிதனின் வாழ்க்கையே சின்னா பின்னமாகிறது, எனவே, மூளையின் செயல்பாட்டினை நன்கு அறிந்து அதனை ஊக்கப்படுத்தினாலே மனிதன் சிறப்புடன் வாழமுடியும்.

~ Dr. Baskaran Pillai




சத்வித்யா நேயர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்! இந்த நவம்பர் மாதத்திலிருந்து நமது நேயர்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறோம். அதாவது, இந்த மாதம் முதல் நமது சத்வித்யா இணைய தள இதழ் மாதம் இருமுறை வெளிவருகிறது என்பதே அந்த மகிழ்ச்சியான செய்தி! இதுவரை இடம்பெற்ற பகுதிகளோடு இன்னும் பல புதிய பகுதிகள் இடம் பெற்று, ஆன்மிக அன்பர்களுக்கு சுவையான அரிய தகவல்களை அள்ளித்தர முனைந்துள்ளோம் இன்னல்கள் அகற்றும் இறைத்தலங்கள், இறைவனின் அருளாசி பெற்ற மகான்கள், ஜோதிடக்கடலில் ஆழ்ந்து கிடக்கும் அரிய முத்துகள் இன்னும் வாழ்வில் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய பயனுள்ள தகவல்கள் தொடர்ந்து அணிவகுத்து வரும். மாதம் இருமுறை வெளியாகவிருக்கும் எங்கள் சத்வித்யா இணைய இதழுக்கு மேன்மேலும் தங்கள் ஆதரவினை மனமுவந்து நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்

(அச்சிட்டு வெளியிடுவோர்) ஆஸ்ட்ரோவேட்.காம்

## தல வரலாறு

# எண்கண் முருகன் ஆலயம்

ஓம் என்னும் பிரணவ மந்திரத்திற்கு பொருள் கூறாத பிரம்மனை சிறையிலடைத்துவிட்டு முருகப் பெருமான் சிலகாலம் சிவபெருமான் ஆசியோடு, படைப்புத் தொழிலை மேற்கொண்டார், அதாவது, பிரம்மனைப்போல் நான்கு தலை, எட்டு கண்களோடு முருகப்பெருமான் அமர்ந்ததால் இந்தத் தலத்திற்கு



எண்கண் என்று பெயர் வந்தது! அதாவது எட்டு கண்கள் என்று பொருள்.

இந்த தலத்திற்கு மேலும் பல சிறப்புகள் உண்டு முக்கியமான சிறப்பு, இங்கே உள்ள மூலவர் முருகப் பெருமானின் சிலையாகும். இந்த சிலையை வடித்தவர்க்கும் சிலைக்கும் உள்ள சிறப்புகளை அறிந்தால் தமிழ்க்கடவுள் முருகனின் தன்னிகரில்லாத சக்தியையும் பெருமைகளையும் நன்கு உணர முடியும்.

நாகப்பட்டிணத்திற்கு அருகே உள்ள திருத்தலம் சிக்கல்! இதனையடுத்துள்ள பொறவாச்சேரி என்னும் இடத்தில் ஓர் முருகன் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்திற்கு ஒரு முருகன் சிலையை செய்ய, அந்த நாட்டின் மன்னன். சில்பமுனி என்னும் சிற்பியை ஏற்பாடு செய்தார்.

சில்பமுனியும் முருகன் மயில்மேல் அமர்ந்த கோலத்தில் இருப்பதைப் போல அழகிய ஒரு சிற்பத்தை கண்கவர் கலையம்சத்தோடு உருவாக்கினார். அந்த சிலை அத்தனை தத்ரூபமாய், உயிரோட்டத்தோடு செதுக்கப்பட்டிருந்து. சிற்பியை வானளாவப் புகழ்ந்தான் மன்னன்.

முருகன் மயில்மீது அமர்ந்திருப்பது சிலைபோலத் தெரியவில்லை; உயிருடன் உள்ளது போலவே தெரிந்ததால் சிற்பியை புகழ்ந்த மன்னன் பொன்னும் பொருளும் வாரிக்கொடுத்து மகிழ்வித்ததோடு, அவரது கட்டை விரலை வெட்டினான் இதுபோன்ற தத்ரூபமான சிலையை வேறெங்கும் செதுக்கக்கூடாது என்று கட்டளையிட்டான்.

கட்டைவிரலை இழந்த சில்ப முனிக்கு இன்னொரு வாய்ப்பு! சற்று தொலைவில் இருந்த எட்டுக்குடி

தலத்தில் ஓர் முருகன் சிலையை பொறவாச்சேரியில். செதுக்கியது போலவே செய்ய வேண்டும் எனக்கூற, அதன் படியே சிலரின் உதவியோடு மீண்டும் ஒரு முருகன் சிலையை கலை நேர்த்தியோடு எட்டுக்குடியில் செய்து முடித்தார் சில்பமுனி!

இந்த முருகன் சிலையும் அதேபோல் உயிர்ப்போடு இருந்ததை அறிந்த மன்னன், தன் கட்டளையை மீறி இன்னொரு சிலையை உருவாக்கிய சில்ப முனியின் கண்கள் இரண்டையும் குருடாக்கிவிட்டான்.

கட்டை விரலையும் இரண்டு கண்களையும் இழந்த சில்பமுனி எண்கண் தலத்திற்கு வந்து சேர்ந்தார்.



இதற்கு முன்னர் வடித்த இரண்டு முருகன் சிலையைப் போலவே இங்கும் ஒரு முருகன் சிலையை உருவாக்க எண்ணி, மெய்யும் மனமும் சேர முருகப் பெருமானை வேண்டினார். சில்பமுனியின் வேண்டுதலை ஏற்று, முருகனே ஒரு சிறுமியின் வடிவில் வந்து சிற்பிக்கு உதவி செய்தார், இரு கண்களும் கட்டைவிரலும் இல்லாத நிலையில் சிற்பி, அந்த சிறுமியான முருகப் பெருமானின் உதவியோடு மூன்றாவதாக ஒரு சிலையை வெற்றிகரமாக உருவாக்கினார்.

முந்தைய இரண்டு சிலைகளைப் போலவே இந்த சிலையும் தத்ரூபமாய் இருந்தது. இதில் மேலும் ஒரு சிறப்பு என்ன வென்றால் மூன்று முருகன் சிலைகளும் ஒரே அச்சில் வார்த்ததோ என்று எண்ணும் படியாக ஒரே மாதிரி இருந்தது அந்த முருகன் செயலே என அனைவரும் வியந்தனர்.

மூன்றிற்கும் ஒரே வித்தியாசம் தான். அதாவது, பொறவாச்சேரியில் செதுக்கிய சிலை நான்கரை அடி உயரமும் எட்டுக்குடியில் உருவாக்கிய சிலை மூன்றரை அடி உயரமும் என்கண்ணில் வடித்த சிலை இரண்டரை அடி உயரமும் கொண்டதாய் உள்ளது. இன்றளவும் மூன்று தலங்களிலும் இந்த சிலைகளே கருவறையில் வீற்றியிருந்து கருனை புரிகின்றன.

மூன்று சிலைகளிலும் உள்ள ஒரு சிறப்பு என்பது, மயில்தான்! ஆறுமுகங்களோடு மயில் மீது அமர்ந்த கோலத்தில் முருகன் காட்சிதரும் இந்த சிலைகளில் மயிலின் இரண்டு கால்கள் மட்டுமே பூமியில் படுகின்றன. மொத்த உருவமும் இந்த இரண்டு கால்களால் தாங்கி நிற்கும் வகையில் மிக சிறப்பாக - அழகாக வடிவமைத்திருந்தார், சில்பமுனி

எண்கண்ணில் மூன்றாவதாய் முருகன் சிலையை வடிக்கும் போது சிறுமியாக வந்த முருகனின் கையில் உளி பட்டு ரத்தம் வந்ததாகவும் அந்த ரத்தம் சிற்பியின் கண்ணில் பட்டு, கண்பார்வை தெரிந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

இறுதியாக சிலைவடித்த இந்த தலத்திலேயே சில்பமுனி முருகனை வேண்டி இறைவனடி சேர்த்தார்.

ஆலய வளாகத்தில் வடக்கு கோபுரத்தின் அருகில், வன்னி மரத்தடியில் விநாயகர் சன்னதிக்கு பின்புறம் சில்பமுனியின் சமாதி அமைந்துள்ளதை இன்றும் காணலாம்.

சில்பமுனி வடித்த இந்த சிலையின் அழகைக்காண, நமக்கு இருக்கும் இருகண் போதுமா? இல்லை, பிரம்மனைப் போல எண்கண் வேண்டுமா? இல்லையில்லை, கோடி கண்கள் இருந்தாலும் இந்த சிலையின் அழகினை அள்ளிப் பருகிட பார்வை போதாது என்பதே உண்மை! இந்த மூன்று தலங்களுக்கும் சென்று முருகனின் அழகை தரிசிப்போம். திருவாரூரிலிருந்து கொறடாச்சேரி செல்லும் வழியில் எண்கண் அமைந்துள்ளது. நாகை அருகில் சிக்கலுக்கு அருகில் பொறவாச்சேரியும் திருக்குவளைக்கு அருகில் எட்டுக்குடி திருத்தலமும் அமைந்துள்ளது.



~ பன்னீர்செல்வம்

# ஜோதிட குறிப்புகள்



வானவெளியில் குரு கிரகம் தன் ஈர்ப்பு விசையால் meteroids எனப்படும் வின் கற்கள் பூமியில் விழாமல் பார்த்து கொள்கிறது. தனது கதிர் வீச்சினால் சூரிய கதிர்களின் வெப்பத்தை குறைத்து பூமியில் வாழும் உயிரினங்களுக்கு தகுந்த மாதிரி மாற்றம் செய்கிறது. அதனாலேயே ஜீவ காரகன் என்று அழைக்க படுகிறது. அதிக பிராண சக்தியும் காந்த சக்தியும் கிடைக்கின்ற வட கிழக்கு ( ஈசான்ய ) மூலையின் அதிபதி குரு. அத்தகைய குரு லக்கினத்தை பார்த்தால், பிராண சக்தியும் காந்த சக்தியும் அதிகமாகும். அந்த மனிதரின் ஆரா நறிய தூரம் நீடித்திருக்கும். ஆரா ( மனித உடம்பை சுற்றி கண்ணுக்கு தெரியாத சக்தி களம்).

ஒரு ஜாதகத்தில் 1, 4, 7, 10 முக்கியமாக கருத படுகிறது... அவைகளை தூண்கள் ( கட்டிடத்தின் 4 pillars) என்று சொல்கிறோம். 2, 5, 8, 11 பண பர ஸ்தானங்கள் இதுவும் முக்கியமே. ஆனால் 3, 6, 9, 12 எனும் ஆபோக்லிம் ஸ்தானங்கள் தேவையற்றதாக உள்ளது என்றால். இந்த ஸ்தானாள் ஒன்றை இழந்து ஒன்றை பெரும் விதமாக உள்ளன. 3 ஆமிடம். சகோதர பாசத்திற்காக தாய் தந்தையரின் அன்பு சொத்து இவற்றை பங்கு போட்டு கொள்ள வேண்டியுள்ளது. 6 ஆமிடம்..... ஆரோக்யத்திற்காக உணவில் கட்டுப்பாடு மேற்கொள்ள வேண்டி யுள்ளது. 9.... புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்றால் நம் சுகம் சௌகர்யத்தை கொஞ்சம் இழக்க வேண்டும்...
12... வெளிநாடு செல்ல வேண்டும் என்றால் குடும்பத்தை, சொந்த ஊரை பிரிந்து செல்ல வேண்டும்... அதனாலேயே இந்த 3, 6, 9, 12 ஆம் இடங்கள் ( அதாவது, கால புருஷனின் உபய ராசிகள் ) மூன்றாவது / கடை நிலையில் உள்ளன....




திருமண பொருத்தத்தில் சில சூக்ஷமங்கள்..
ஒருவரின் சூர்யன் மீது மற்றொருவரின் ராகு / கேது இருந்தால், வருமானம், கௌரவம் பாதிக்கும்.. வீட்டில் உள்ள பெரியவர்களுக்கும், தந்தை / மாமனாருக்கும் ஆகாது..
ஒருவரின் சந்திரன் மீது மற்றவரின் ராகு / கேது இருக்க, பயம் மற்றும் பாசம் கலந்து இருக்கும்.. பாசத்தை வெளி காட்ட முடியாமல் இருக்கும்.. இதனால் மன நோய் ஏற்படும்...
ஒருவரின் செவ்வாய் மீது மற்றொருவரின் ராகு / கேது இருந்தால் பிரச்சனை, பிரிவினை யை ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்க்கை பிடிக்காமல் பிரிவினை யை தூண்டும்...

திருமண பொருத்தத்தில் சில உன்னத அமைப்புகள்..

ஒருவரின் குரு மீது மற்றவரின் சுக்ரன் / செவ்வாய் இருப்பது இருவருக்கும் மகிழ்ச்சியான பிரியமான மண வாழ்க்கை யை தரும்...

ஒருவரின் குரு மீது மற்றொருவரின் சந்திரன் இருப்பது, ஒருவர் மேல் ஒருவருக்கு நல்ல நம்பிக்கை ஏற்படும்.. இதுவும் உத்தமமான அமைப்பு தான்...
ஒருவரின் சனி மீது மற்றொரு வரின் குரு இருப்பதும் / ஒருவரின் சனியை மற்றொரு வரின் குரு பார்ப்பதும் நல்ல தொழில் வளர்ச்சி யை தந்து சிறப்பான வாழ்க்கை அமையும்...

ஒவ்வொரு நாமயோகமும் ஒரு நட்சத்திரத்தோடு தொடர்பு கொண்டுள்ளது....
அதில் அதிகண்ட நாமயோகம் மூல நட்சத்திரத்திற்கு தொடர்பு உடையது..
அதிகண்டம் (அதிக தடைகள், அவிழ்க்க முடியாத முடிச்சுகள்)
இந்த நாமயோகத்தின் அதிபதி நிருதி..
அடுத்து வியதி பாத நாமயோகம், திருவாதிரை நட்சத்திர த்தோடு தொடர்பு உடையது...
வியதிபாதம் (பேரழிவு)
இந்த நாம யோகத்தின் அதிபதி ருத்ரன்..
இந்த இரண்டு மோசமான நாமயோகத்தோடு தொடர்புடைய நட்சத்திரங்களில் தான் தற்போது ராகுவும் கேதுவும் உள்ளன...




பேரழிவை ருத்திரனும் அவருக்கு துணையாக நிருதியும் செயல் படு கிறார்கள்...
எனவே ராகு கேது இந்த நட்சத்திரங்களை விட்டு சென்றால் மட்டுமே விடிவு காலம்...
அது சீக்ரம் நடக்கும்..

ரேவதி நட்சத்திரம் சுபம் நாம யோகத்தோடு தொடர்பு உடையது...
சுபம் என்றால் நன்மை. இந்த சுபம் நாமயோகத்தின் அதிபதி லக்ஷ்மி...
அதனால் தான் ரேவதி நட்சத்திரத்தில் சுக்ரன் உச்சம்..
இதில் இருந்தே நாமயோகத்திற்கும் நட்சத்திரத்திற்கும் உள்ள தொடர்பு புரிகிறது..




அவிட்டம் நட்சத்திரம்..
இந்த நட்சத்திரமும் வரியான் நாமயோகமும் தொடர்பு பெற்றது...
வரியான் என்றால் சிறந்தது, மிகப்பெரியது இதன் அதிதேவதை குபேரன்..
அவிட்ட நட்சத்திரம் தவிட்டுப் பானையெல்லாம் தங்கம். என்று கேள்விப்பட்டிருப்போம். அது எதனால் என்றால், குபேரனை அதிபதி யாக கொண்ட வரியான் நாமயோகத்தோடு தொடர்புடையதால். இந்த வரியான் 100 percent சுப நாம யோகம்...
வியாழகிழமை, குபேரனுக்கு உரிய நாள்.. அவர் தொடர்புடைய நட்சத்திரமும்...

~ கோவை லெட்சிமி சிவா

# மூலிகை ரகசியம்



## ரணகள்ளி (Bryophyllum pinnatum)

நமது மூலிகை ரகசியத்தில் இந்த இதழில் நாம் காணவிருப்பது ரணகள்ளி!

கள்ளி வகையைச்சேர்ந்த இந்த தாவரம், சாதாரணமாக சாலை ஓரங்களிலும் வேலிகளிலும் காணப்படுவதாகும். கள்ளியில் சுமார் இரண்டாயிரம் வகைகள் உண்டு நம்நாட்டில் செடிக்கள்ளி, இலைக்கள்ளி, சதுரக்கள்ளி, ரத்தக்கள்ளி போன்ற கள்ளி வகைகள் ஆங்காங்கே காணப்படுகிறது.

ஆங்கிலத்தில் இதற்கு **Air plant** என்ற பெயரும் உண்டு. இது காரணப்பெயர், காற்றில் உள்ள ஈரப்பதத்தினை உறிஞ்சி உயிர்வாழும் தன்மை உள்ளதால் ரணகள்ளிக்கு இந்தப் பெயர் வந்தது.

செடிவகையைச் சேர்ந்தது இந்த ரணகள்ளி! தண்ணீர் இல்லாத காலங்களில் வறட்சியைத் தாங்கும் வலிமை பெற்றது. இருந்தாலும் போதிய தண்ணீர் இருந்தால் நன்றாக வளரும்.



ரணகள்ளியின் பயன்கள்: பல நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது இந்த ரணகள்ளி மூலிகை, குறிப்பாக, உடலில் ஏற்படும் ரணங்களை ஆற்றும், கிட்னியில் உள்ள கற்களைக்கரைக்கும். கால் ஆணியை குணப்படுத்தும். பெண்களின் கர்ப்பப்பை புண்களை குணமாக்கும், மலத்தை இளக்கும், மேகநீர், அரிப்பு இவற்றைப் போக்கும், நரம்பு சிவந்தியை குணப்படுத்தும் படை, சொறி ஆகியவற்றை குணமாக்கும்.

இதன் இலைகள் அபூர்வமான மருத்துவ சக்தி வாய்ந்தவை. ரணகள்ளி செடியில் இதன் இலைகளே மருத்துவ சக்தி கொண்டதாய் விளங்குகிறது.

பயன்படுத்தும் முறை: தினம் ஒரு இலையாக 7 நாட்கள் காலையில் தின்று தண்ணீர் அருந்த கிட்னி கல் கரையும். துளிர் இலையில் தொடங்கி, அடுத்தடுத்து அடியில் உள்ள இலைகளை சாப்பிட வேண்டும். இதே போல் காலை, மாலை இரு வேளை பெண்கள் இப்படி பயன்படுத்தினால் கர்ப்பப்பை புண்கள் ஆறும்! இந்த இலையின் சாற்றினை கால் ஆணி உள்ள இடத்தில் இரவில் தடவி, காலையில் கழுவி வர கால் ஆணி குணமாகும்.

இன்னும் பல நோய்களுக்கு மருந்தாகும் ரணகள்ளியை பயன்படுத்தி, நல்வாழ்வு பெற வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.மூலிகைப் பண்ணை மற்றும் நர்சரிகளில் இந்த செடியை வாங்கி, வீட்டில் வளர்த்து நன்மை அடையலாம்.

~ பன்னீர்செல்வம்

# "குற்றாலக் குறவஞ்சி"

எனும் மிகப்பழைமையான நூல்,

ஓர் அபூர்வமான தகவலைச் சொல்கிறது.

குறவன் ஒருவன் முதன் முதலாக வேட்டையாடப்போனான். ஆறுநாட்கள் ஆயின. ஒரு கொக்கு அகப்பட்டது. கிடைத்த கொக்கை நன்றாக அவித்து, ஒரு சட்டியில் சாறாக (சூப் போல) வைத்தார்கள். அதை அறிந்ததும், வேதப் பிராமணர்கள் சட்டியில் இருந்த அந்தச் சாறை ஏற்றார்கள்; சைவர்களும் சட்டியில் இருந்த அந்தச் சாறை ஏற்றார்கள்; அது மட்டுமா? "நம் தவப் புண்ணியம் இது" என்று முனிவர்கள் கூட, சட்டியில் இருந்த கொக்குச் சாறை ஏற்றுக்கொண்டார்கள்.



இத்தகவலைச் சொல்லும் பாடல்:

மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்
வேட் குறவன் முதல் வேட்டைக்குப் போன நாள்
ஆறு நாள் கூடி ஒரு கொக்கு பட்டதுளூ
அகப்பட்ட கொக்கை அவித்து ஒரு சட்டியில்
சாறாக வைத்தபின் வேதப் பிராமணர்
தாமும் கொண்டார், சைவர் தாமும் கொண்டார், தவப்
பேறா முனிவரும் ஏற்றுக் கொண்டார், இதைப்
பிக்குச் சொல்லாமலே கொக்குப் படுக்கவே

(குற்றாலக் குறவஞ்சி)

பாட்டிற்கான சாதாரண-மேம்போக்கான விளக்கத்தைப்பார்த்தோம் .இனி பாட்டின் உண்மையான பொருளைப் பார்க்கலாம்.

கொக்கு - பறவை - மாமரம்.

அவித்தல் - வேக வைத்தல் - அழித்தல்.

சட்டி - மண் பாண்டம் - சஷ்டி.

சாறு - குழம்பு - விழா.

வைத்தல் - காய்ச்சுதல் - நிகழச் செய்தல்.

மாமர வடிவாக மாய வடிவம் கொண்ட சூரபத்மனை, முருகப்பெருமான் சம்ஹாரம் செய்தார்; சூர சம்ஹாரம். அந்த சூர சம்ஹாரத்தை, ஆறு நாட்கள் கொண்ட "கந்தசஷ்டி" எனும் திருவிழாவாக வைத்தார்கள். கந்த சஷ்டி விழாவை - விரதத்தை வேதப் பிராமணர்கள், சைவர்கள், முனிவர்கள் என அனைவரும் ஏற்றுக் கடை பிடிக்கிறார்கள்.

மேற்கண்ட குற்றாலக் குறவஞ்சிப் பாடலின் உண்மைப்பொருள் இதுவே. இரு விதமான பொருள் கொண்ட அருந் தமிழ்ப்பாடல் இது.

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# அரிய ஆன்மிக தகவல்

## 48 ஆண்டுகளாக வாடாத மலர் மாலை

நான்மாடக்கூடலாம் மதுரை மாநகரின் மையத்தில் கோயில்கொண்டு அருள்புரியும் அன்னை மீனாட்சியின் ஆலயத்தில் நடைபெற்ற அதிசயம் இது!

சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னால், இன்றுபோல் மக்கள் பக்திமயமாக மீனாட்சி அம்மனையும் சொக்கநாத பெருமானையும் வணங்கி வந்தனர் அப்போது , இசுலாமியத் தளபதியான மாலிக்காப்பூர் தென்னிந்திய கோவில்களில் மீது தனது படைபலத்தை ஏவிவிட்டு கோவிலில் உள்ள பொக்கிஷங்களைக் கொள்ளையடித்தும் சிலைகளை சேதப்படுத்தியும் வந்தான்.



ஒரு இக்கட்டான நேரத்தில் மதுரையம் பதியைத் தாக்க திட்டமிட்டு அந்தப்படைகள் வருவதை அறிந்த குறுநில மன்னன், மாலிக்காப்பூரின் படைவலிமைக்கு அஞ்சி, நாட்டைவிட்டே வெளியேறினான்.

எப்படியாவது இந்த ஆலய இறைவனை பாதுகாக்க வேண்டும் என எண்ணிய கோயில் ஸ்தானிகர்கள் சொக்கநாதப் பெருமானின் கருவறையை மணல்மேடு கொண்டு மூடி, கருவறையை மறைத்தனர், சர்த்த மண்டபத்தில் வேறோடு சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து விட்டு சென்றனர்.

முகலாயப் படைகள் திட்டமிட்டபடி வந்தன தற்காலிகமாய் நிறுவிய சிவலிங்கத்தைப் பெயர்த்து அடியில் பொக்கிஷம் உள்ளதா என தேடினார். ஏதும் இல்லாததால் ஆத்திரமடைந்த படையினர் அந்த சிவலிங்கத்தை உடைத்து சேதப்படுத்தி விட்டு சென்றனர்.

உண்மையான சிவலிங்கம் கருவறையில் பத்திரமாக இருந்தது, ஸ்தானிகர்கள் கருவறையை மூடிய போது சிவலிங்கத்துக்கு சந்தனக் காப்பிட்டு மலர்மாலைகள் சூட்டி, விளக்குகளை ஏற்றி வைத்துவிட்டே கருவறையை மூடினர்.

இது நடந்து 48ஆண்டுகள் கழித்து, அன்னியப்படையெடுப்பை முறியடித்தார் கம்பண்ணர் என்ற குறுநில மன்னன். சிலர் தெரிவித்த தகவலின் படி கருவறையை மூடியபொது பூசிய சந்தனம் மணம் வீசியது மலர் மாலைகள் வாடவில்லை, விளக்குகள் அணையவில்லை இன்று பூஜை செய்தது போலவே இருந்தது் இதைத்தான் கம்பண்ணர் கண்ட காட்சி என்று வரலாறு போற்றுகிறது. உடைக்கப்பட்ட சிவலிங்கமும் இது பற்றிய தகவலும் சுவாமி கருவறையின் வெளிப்பிரகாரத்தில் இன்றும் உள்ளதைக் காணலாம்.

~ பன்னீர்செல்வம்

# தீபாவளியின் சிறப்பு
# “இத்தனை தீபாவளியா”

ஆவளி எனும் சொல்லுக்கு வரிசை என்பது பொருள். தீப ஆவளி என்பது தீபங்களை ஏற்றி வரிசையாக வைத்து வழிபாடு செய்வதைக்குறிக்கும். தீபாவளி அன்று 21- விளக்குகளை ஏற்றி வைத்து வழிபட வேண்டும். ஒளியை விரும்பாதவர்கள் - விடிவு காலத்தை விரும்பாதவர்கள் யார்? துயர இருளை ஓட்டி, நன்மை எனும் மங்கல ஒளியைச் சுட்டிக்காட்டி, அதை அடையும் வழியைக் காண்பிப்பதே தீபாவளி.

தீபாவளியில் பலவகை உண்டு. ஒருசில...



**ராமாயண தீபாவளி:** ராவண சம்ஹாரம் முடிந்து சீதையை மீட்ட ஸ்ரீ ராமர் அயோத்தி திரும்பினார். அப்போது இரவு மூன்று மணி. பதினான்கு ஆண்டுகளாக ஸ்ரீராமரைத் தரிசிக்காத அயோத்தி நகரவாசிகள், அந்த இரவு நேரத்தில் ஏராளமான விளக்குகளை வரிசைவரிசையாக ஏற்றி வைத்து, ஸ்ரீ சீதா-ராமர்களை வரவேற்றுத் தரிசித்து மகிழ்ந்தார்கள். ஸ்ரீராமரும் சீதையும் அரண்மனைக்குள் நுழைந்தார்கள். அப்போது கோசலாதேவி, "சீதே! விளக்கேற்ற வந்த திருமகளே இந்த அரண்மனை நீ இல்லாததால், இருள் சூழ்ந்ததாகி விட்டது. நீ விளக்கேற்றி அந்தகாரம் விலகி அருள் ஒளி பரவட்டும்” என்றாள். அவ்வாறே சீதை தீபங்களை ஏற்றி வரிசையாக வைத்து வழிபாடு செய்தாள். அந்நாளே தீபாவளி.

**வாமன தீபாவளி:** பிரகலாதனின் பேரனான மஹாபலி "திருமு(அ)டி சூட்டிக்கொண்ட நாளே தீபாவளி. வாமன அவதாரம் எடுத்த நாராயணர், மஹாபலிக்கு அருள்புரிந்து, அவருக்கு ஞானத்திருமு(அ)டி சூட்டிய நாளே தீபாவளி.

**ஜைன தீபாவளி:** ஜைனர்களின் குருவான வர்த்தமான மகாவீரர் என்பவர் முக்தி அடைந்த நாளே தீபாவளி. அந்த ஞானஒளி மறைந்த நாளன்று தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து அறியாமை இருளை விலக்கி, ஞான ஒளியைத் தரிசிப்பதே தீபாவளி.

**விக்ரமாதித்த தீபாவளி:** விக்ரமாதித்த சகாப்தம் என்பதை உருவாக்கிய உஜ்ஜெயினி மன்னர் விக்ரமாதித்தன் தன் பகைவர்களான சாகாஸ் என்பவர்களை வென்று முடிசூட்டிக்கொண்ட நாளே தீபாவளி.

**சீக்கிய தீபாவளி:** ஜஹாங்கீர் என்பவன் ஐம்பத்திரண்டு ராஜபுத்திர அரசர்களையும் சீக்கியர்களின் ஆறாவது குருவான
"குரு கோவிந்தசிங்" என்பவரையும் சிறையில் அடைத்து வைத்திருந்தான். குரு கோவிந்தசிங் சாமர்த்தியமாகச் சிறையிலிருந்து தப்பினார்; தன்னுடன் சிறைபட்டிருந்த ராஜபுத்திர அரசர்களைத் தப்பவைத்து, அவர்களையும் காப்பாற்றினார். தப்பிவந்த அவர்களுக்கு ஏராளமான விளக்குகளை ஏற்றி வைத்துப் பொற்கோவிலில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மக்கள் அவரவர் வீடுகளிலும் தீபங்களை ஏற்றி வைத்தார்கள். அந்த நாளே - தீபாவளி.

**அசோக தீபாவளி:** சாம்ராட் அசோகன் தன் திக்கு விஜய யாத்திரையை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய நாள் தீபத்திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அந்நாளே தீபாவளி.



**சிவாஜி தீபாவளி:** "சத்ரபதி சிவாஜி" என அழைக்கப்பட்ட மராட்டிய மன்னர், தீபாவளி அன்றுதான் தன் விரோதிகளின் கோட்டையைத்தாக்கிக் கைப்பற்றினார். அதை நினைவு படுத்தும் விதமாகப் பொதுமக்கள் தங்கள் வீடுகளின் வாசலில் மண்ணாலான ஒரு சிறிய கோட்டையைக் கட்டுகிறார்கள். இந்தக் கோட்டை கட்டும் நிகழ்ச்சியில் சிறுவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொள்வார்கள். தீபாவளியன்று மும்பையில் இவ்வாறு மண் கோட்டைகள் கட்டுவதை இன்றும் காணலாம்.

**சீன தீபாவளி:** இத்திருநாளன்று விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து, வீட்டுக்கதவுகளில் "நன்றாக வாழ்" "வளமை பெருகட்டும்" என்பதான மங்கல வாசகங்களை எழுதி வைத்துத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடினார்கள். புதுவருடக்கணக்கையும் தீபாவளித் திருநாளன்றே துவக்கினார்கள்.

**ஜப்பான் தீபாவளி:** தீபாவளி அன்று முன்னோர்கள் - பித்ருக்கள் அனைவரும் வந்து ஆசி வழங்குவதாக ஐதீகம், விளக்குகளை ஏற்றிவைத்து முன்னோர்களை வரவேற்கும் வழிபாடாகத் தீபாவளி கொண்டாடப் படுகிறது. முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாக இப்படிப்பட்ட தீபாவளி ஜப்பானில் கொண்டாடப்பட்டு வருகிறது. நம் நாட்டிலும் "நரக சதுர்தசி" எனும் தீபாவளியை ஒட்டி அமாவாசை வருவது நினைவில்

கொள்ளத்தக்கது.

**தாய்லாந்து தீபாவளி:** இத்திருநாள் அன்று வாழையிலையால் செய்யப்பட்ட இலை கிண்ணங்களில் ஒரு மெழுகுவர்த்தி யையும் ஊதுவத்திகளையும் ஏற்றி வைப்பார்கள், அத்துடன் காசுகளையும் போட்டு, நீரில் மிதக்க விடுவார்கள். தாய்லாந்தில் தீபாவளிக்குப்பெயர் "லாய் கரடாங்க் ( Loy Karatang ) என அழைக்கப்படும்.

### நாம் அறிந்த தீபாவளி

நரகாசுர சங்காரம் நடந்த நாள் தீபாவளி. தேவேந்திரன் முதலான தேவர்களுக்கும் அடுத்தவர் வாழத்தவம் செய்யும் முனிவர்களுக்கும் சொல்ல முடியாத தீமைகளைச்செய்து அவர்களை வாட்டி வதைத்தவன் நரகாசுரன். தேவர்களும் முனிவர்களும் கண்ணனிடம் வேண்டுகோள் விடுக்க, அவர்களைப் பாதுகாக்கப் பரந்தாமன், தேரிலேறிப் புறப்பட்டார், சத்தியபாமா தேரோட்டினாள்.

நரகாசுரனின் இருப்பிடமான பிரக்ஜோதிஷபுரம் எனும் இடத்தை அடைந்தார்கள். நரகாசுரனின் முக்கியக்கோட்டைகளான கிரி துர்கம், அக்னி துர்கம், ஜல துர்கம், வாயு துர்கம் எனும் கோட்டைகளை அழித்து ஊருக்குள் புகுந்தார் கிருஷ்ணபரமாத்மா.

நரகாசுரன் அழிக்கப்பட்டான். நல்லவர்கள் துயர் தீர்ந்தார்கள். நரகாசுரன் அழிக்கப்பட்ட அத்திருநாளே "தீபாவளி".

அறியாமை எனும் இருள் நீங்கி, ஞானஒளி பரவும் திருநாள் தீபாவளி.


கிரி(மண்), அக்னி(தீ), ஜலம்(நீர்), வாயு(காற்று) எனச் சொல்லப்பட்ட நான்கும் பஞ்ச பூதங்களில் நான்கைக் குறிக்கும்; இந்நான்கும் இடம் பெற்ற ஆகாயத்யையும் சேர்த்துப் பஞ்ச பூதங்களாகும்.

பஞ்சபூதங்களால் ஆன நமது உடம்பில் நரகாசுரன் எனும் அறியாமை அசுரன் இடம்பிடித்து, நம்மை ஆட்டிப்படைத்து அனைவர்க்கும் தீங்கு விளைத்து வருகிறான். அந்த அறியாமை எனும் அசுரஇருளை நீக்கி, ஞானமயமான ஒளியைப் பரப்புவதே "தீபாவளி".

தீபாவளியின் உட்பொருள் இதுவே. இதை பகவான் ரமணர் கூறுகிறார், "தீய எண்ணங்கள் தாம் நரக(ம்)ன். அவன் குடியிருக்கும் வீடு - நம் உடம்பு. அந்த மாயாவியை அழித்து தானாக ஆவது - அதாவது ஆத்மஜோதியாகத் திகழ்வதே தீபாவளி" என்று கூறியிருக்கிறார்.

தீபாவளி சர்வ மங்கலங்களையும் அருளட்டும்!

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்



# சூரியன் எந்திரம்

மனிதனுக்கு பலத்தையும், சக்தியையும், ஆற்றலையும் தருவது சூரியன். சூரியன் பலமற்று இருந்தால் எலும்புகள் பாதிக்கும். இருதயம் தொடர்பான அறுவை சிகிச்சைகள், கண் பார்வைக் கோளாறு, தலைவலி, தலைசுற்றல், சிறுசிறு பிரச்சினைகளுக்கு கடும் கோபம் வரும், நோய்கள் ஏற்படும். சூரியன் தனது பகை கிரகங்களான சுக்ரன், சனி, ராகு, கேது ஆகியோரோடு இணைந்து எந்த ராசியில் இருந்தாலும் அவர்களுக்கு எலும்பு முறிவு, தலையில் ரத்தம் கசிவு ஏற்படக்கூடும்.



இந்த யந்திரம் வைத்து 41 பூஜை நாட்கள் விரதமிருந்து பூஜிப்பதன் மூலம் சூரிய பகவானின் பூர்ண அனுகிரகம் கிடைக்கும். சூரியன் யோகம் ஒருவரை உலகமே திரும்பி பார்க்க வைக்கும். தீராத நோய்கள் அனைத்தும் தீரும். மன தைரியம், உடல் வலிமை, நோயைத் தாங்கும் சக்தி வந்து சேரும்.

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்

# மந்திரமும் அர்த்தமும்

## சந்திரன்

"சோமஹ ப்ரதமோ விவேத கந்தர்வ விவிதே உத்ரஹ த்ருதியோ
அக்னிஸடேபதிஸ துரியஸதே மனுஷ்ய ஜாஹ"

"முதலில் சோமன் (சந்திரன்) உன்னை பாதுகாத்தான்
பின் கந்தர்வன் உன்னை பாதுகாத்தான்
மூன்றாவதாக அக்னி உன்னை பாதுகாத்தான்
நான்காவதாக மனிதனாகிய நான் உன் பாதுகாவலன் ஆகிறேன்"

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்

# எண் கணிதம் என்னும் அதிர்ஷ்ட விஞ்ஞானம்

இந்தியத் திருநாட்டில் பொக்கிஷமாய்த் தோன்றிய எத்தனையோ கலைகளில் எண் கணிதம் என்றும் சாஸ்திரமும் ஒன்று. ஜோதிடம், வானவியல்போல இதுவும் ஓர் விஞ்ஞானமே

ஜோதிட சாஸ்திரம் அளவுக்கு இல்லாவிடினும் எண்கணிதமும் அதிர்ஷ்டத்தை ஓரளவு அள்ளித்தருவதால் அதிர்ஷ்ட விஞ்ஞானம் என வர்ணிக்கப்படுகிறது.

ஒரு மனிதனின் ஜனன கால ஜாதகமே முழு பலன்களை சொல்ல தகுதியானது. அதில் கவனிக்கப்படாத சில விஷயங்களை சரி செய்ய எண்கணிதம் பயன்படுகிறது. அதாவது ஜாதகம் 70 சதவிகிதம் முழுமையான பலன்களைக் கொடுக்கும். எண்கணிதம் 25முதல் 30சதவிகிதம் பலன்களை கொடுக்கும் என்பதே மறுக்க முடியாத உண்மை.

70+30 சேர்த்தால் நூறல்லவா? ஒரு மனிதனின் அதிர்ஷ்ட நிலையை மேம்படுத்திக்கொள்ள எண்கணிதம் உதவும். ஜோதிடம், எண்கணிதம் இரண்டிற்குமே ஒன்பது கிரகங்கள்தான் அடிப்படை ஆதாரமாய் அமைகிறது. இந்த கிரகம் இந்த எண்ணை ஊக்குவிக்கும் என்ற அடிப்படையிலேயே எண்கணிதம் செயல்படுகிறது.

இப்போது ஆங்கில எழுத்துக்களுக்கான எண்களையும் அவற்றிற்குரிய கிரகங்களையும் பாப்போம்.

| | | |
|---|---|---|
| A, I, J, Q, Y | எண் 1 | - சூரியனைக்குறிக்கும். |
| K, B, R | எண் 2 | - சந்திரனைக்குறிக்கும் |
| C, G, L, S | எண் 3 | - குருவைக்குறிக்கும் |
| D, M, T | எண் 4 | - ராகுவைக்குறிக்கும் |
| E, N, X, H | எண் 5 | - புதனைக்குறிக்கும் |
| U, V, W | எண் 6 | - சுக்கிரனைக்குறிக்கும் |
| O, Z | எண் 7 | - கேதுவை குறிக்கும் |
| P, F | எண் 8 | - சனியைக்குறிக்கும் |




எண் கணிதத்தின் உச்ச எண் 9 செவ்வாயைகுறிக்கும்.

ஒருவரது பிறந்த தேதி 14 என்றால் 1+4=5 என்று ஒற்றை எண்ணாக மாற்றி, பலன்காண வேண்டும். 14.8.1965 என்றால் 1+4+8+1+9+6+5=34, 3+4=7 என்பது மொத்த எண்ணாக கொள்ள வேண்டும்.

இவற்றில் பிறந்த தேதி என்பது பிறவி எண் எனப்படும். இது, அந்த நபரின் தோற்றம், குணம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். பிறந்த தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் ஒற்றை எண் விதி எண் எனப்படும். இந்த விதி எண், ஒருவரது வாழ்க்கை எப்படிச் செல்லும் என்பதைக் காட்டும்.

பிறந்த எண்ணும் விதி எண்ணும் அதிர்ஷடமானவையாக இல்லை யென்றால், நமது பெயர் எண்ணை அதிர்ஷடம் உள்ளதாக வைத்துக் கொள்ளலாம்.

ஒருவர் ஜாதகம் பார்த்து, ஜாதகப்படி எந்த கிரகம் அவருக்கு நன்மை செய்யுமோ அந்த கிரகத்தை Activate செய்யும் விதமாக பெயர் எண்ணை அமைத்துக்கொள்வதன் மூலம், நமது வாழ்க்கை அதிர்ஷ்டமானதாய் விளங்கும்.

இதில் சில சூட்சுமங்களும் உள்ளன. 1ம் எண்ணில் பிறந்தவர்களுக்கு 4மற்றும் 8ம் எண்காரர்கள் நன்மை செய்வர், உறுதுணையாக இருப்பர். 2ம் எண்ணில் பிறந்தோருக்கு 7எண் காரர்கள் ஈர்ப்புடன் விளங்குபவர். 3எண்காரர்களால் 6ம் எண்காரர்களுக்கு வாழ்க்கையில் புதிய வெளிச்சம் கிடைக்கும். 5ம் எண்ணில் பிறந்தவர்களுக்கு அனைத்து எண்ணில் பிறந்தவர்களையும் ஈர்க்கும் தன்மை உண்டு இப்படி ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஓர் தனித்தன்மை உண்டு. ஜாதகரீதியாக பலன்களிலும் இது சற்றே ஒத்துப்போகும்.

8ம் எண்ணில் குறிப்பாக 26ம் தேதியில் பெண் பிறந்தால், கவனமுடன் இருக்க வேண்டும். 6ம் எண்ணில் பிறந்தோர் கலையுலகில் புகழ்பெறுவதும் 1ம் எண்ணில் பிறந்தவர்கள் அரசியல் மற்றும் அரசுத்துறையில் உயர்வு பெறுவதும் இந்த எண்களின் சிறப்பை காட்டும்.

8ம் எண்ணில் பிறந்தவர்கள் நீதிபதிகளாவும் நியாயவான்களாகவும் விளங்குபர்கள்.
5ம் எண்ணில் பிறந்தவர்கள் தொழில் நடத்தி, பெரும் தொழில் அதிபர்களாக விளங்குவது உண்டு.
4ம் எண்ணில் பிறந்தோர். விளையாட்டு மற்றும் நடனத்துறையில் சிறந்து விளங்குவார்.
2ம் எண்ணில் பிறந்தோர் அகிம்சையில் நம்பிக்கை கொண்டு பெரும் மகன்களாகவும் ஒரு சாரார் கொடூர மனம் படைத்த தீவிரவாதிகளாகவும் இருப்பது உண்டு இது, ஜாதக ரீதியிலான தோஷம், யோகம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். இதற்கு சரியான உதாரணம். காந்தியும் ஹிட்லரும் ஆவர்.

ஒவ்வொரு மனிதனின் முன்னேற்றத்திலும் எண் கணிதத்தின் பங்கு சிறிதளதாவது இருக்கும் என்பதனை ஆராய்ந்து பார்ப்பதாலும் அனுபவித்து அறிவதாலும் உணரலாம்.

~ பன்னீர்செல்வம்

# சித்தர் பூமி

## ஸ்ரீ கசவன ஜோதி மௌன நிர்வாண சுவாமிகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)



கசவனம்பட்டி என்னும் இந்த சிறிய கிராமத்தை விட்டு வேறெங்கும் செல்லாமல் பல ஆண்டுகள், ஓர் அவதூதராக அதாவது நிர்வாண கோலத்தில் இங்கேயே திருப்பாதம் பதித்து உலவும் சுவாமிகள், மக்களின் பார்வையில் ஒரு மகானாக அல்லாமல் தெய்வமாகவே பார்க்கப்பட்டார் என்பதே உண்மை.

காலப்போக்கில் சுவாமிகளின் அருமை பெருமைகளும் இவர் நிகழ்த்திய அற்புதங்களும் சூரியனின் ஒளி போல எட்டுத்திக்கிலும் எட்டியது. இதன் விளைவாக வாழ்வில் இனி தங்களுக்கு கடைத்தேற்றமே இல்லை என்றெண்ணி கண்ணீர் வடித்தோர், கடவுளைத் தவிர தங்களுக்கு வேறு கதி இல்லை என்று எண்ணியோர், வாழ்வியல் துன்பத்தில் சிக்கி, வகை தெரியாமல் தவித்தோர் என அனைவருமே தங்கள் ஆத்ம நிம்மதி வேண்டி இந்த ஆண்டவனைக்கான அணி அணியாய் திரண்டு வந்தனர்.

அப்படி வந்தவர்கள் அனைவருக்கும் ஆறுதலும் தேறுதலும் அளவிட முடியாத ஆனந்தமும் கிடைத்தது. இத்தனைக்கும் இவர் வாய்திறந்து உபதேசம் செய்யவில்லை கடைக்கண் பார்வை மட்டுமே! சிலருக்கு, அது கூட இல்லை. கல்லடி, காலடி என அவரவர் பூர்வ ஜென்ம வினைகளுக்குத் தகுந்தவாறு சிறுசிறு செயல்களால் தீவினைகள் ஓட்டினார், இந்த கசவன ஜோதி என்னும் கண்கண்ட கடவுள்! அவற்றில் சில வற்றைப் பார்ப்போம்.

திருவண்ணாமலையை அடுத்த திருக்கோவிலூரில் தபோவனம் அமைத்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வந்த மாபெரும் ஞானி, ஞானானந்தகிரி சுவாமிகள் அந்த மகானின் பரம பக்தரான தூத்துக்குடியைச் சேர்ந்த பெரும் தொழிலதிபர் ஒருவர், அந்த ஞானியை சந்திக்க தபோவனத்துக்கு சென்றார். மகானை சந்தித்த அவர், தனக்கு ஏற்பட்டுள்ள ஒரு பிரச்சினையை சொல்லி தீர்வினைக் கேட்டார். மகான் ஞானானந்தரோ சிரித்தபடி, ஒட்டன் சத்திரத்திற்கு கிழக்கே பத்துமைல் தொலைவில் உள்ள கசவனம்

பட்டியில் ஓர் துருவ நட்சத்திரம் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அங்கே சென்றால் உன் குறைகள் தீரும் என்று சொல்ல, அந்த தொழிலதிபர் நம் மகானைத்தேடி வந்து தரிசனம் செய்தார்.

நம் கசவனஜோதியவர்களின் மகிமையை கேள்விப்பட்ட ஒருவர், தொலை தூரத்திலிருந்து கசவனம்பட்டிக்கு வந்தார். அப்படியே சுற்றித்திரிந்த சுவாமிகளைப் பார்த்தார். சிறிது நேரத்தில் நம் சுவாமிகள் கால்போன போக்கில் காட்டுக்குள் நடந்து சென்றார். பழக்கப்பட்டவர்கள் சுவாமிகள் காட்டுக்குள் போகும் பொது அவரைப் பின் தொடர மாட்டார்கள், ஆனால், புதிதாய் வந்த அந்த நபர், சுவாமிகளை தனியாய் தரிசிக்க இதுவே சரியான தருணம் என்றெண்ணி பின்னாலேயே சென்றார், காட்டில் ஒரு பாறை மீது அமர்ந்த சுவாமிகள் வானத்தைப் பார்த்தபடி சிந்தனையில் இருக்க, இந்த நபர், அருகிலிருந்த ஒரு பாறையில் அமரப்போக, ஒரு கல்லை எடுத்து அவரை அடித்து விட்டார் சுவாமிகள் பிறகென்ன? அதன்பின் அந்த நபரின் வாழ்க்கையில் ஏற்றம் தான்


திண்டுக்கல்லைச் சேர்ந்த அன்பர் ஒருவர், அடிக்கடி சுவாமிகளை தரிசனம் செய்ய கசவனம்பட்டிக்கு வருவார், நல்ல நிலையில் வாழ்ந்த அவர் எந்தக் குறையும் இல்லாமல் இருந்தார். ஆனால், அவருக்கு அடிக்கடி மயக்கம் வரும், இதை அவர் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை அவ்வப்போது உரிய மருத்துவரைப் பார்ப்பார். அவர்களும் மருந்துகள் கொடுத்து சரியாகிவிடும் என்பார்கள். ஆனால், இந்த மயக்கம் சரியாகாமல் அடிக்கடி வந்து கொண்டிருந்தது விபரீதத்தை உணர்ந்த அவர், சரி கசவனம்பட்டிக்கு சென்று சுவாமிகளிடம் பாப்போம் என்று இங்கு வந்தார், அவர் வந்த நேரம், சுவாமியவர்கள் ரோட்டோரம் இருந்த ஒரு டீக்கடைக்கு வெளியே, எரிந்து கொண்டிருந்த அடுப்பில் முள்நிறைந்த சுள்ளிகளை போட்டு எரித்துக்கொண்டிருந்தார். வந்த அன்பர் அருகே செல்ல, சுவாமிகள் கோபத்தோடு ஒரு சுள்ளியை எடுத்து அவர் தலையில் அடிக்க, வலது கண்ணுக்கு மேலே காயம் ஏற்பட்டு,




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும்
சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்
www.priestservices.com போன்: 95004 95008

ரத்தம் வழிந்து தரையில் சொட்டியது, வலியில் துடித்த அவரை சுவாமிகள் பார்த்தார்! சில நொடிகள்தான் தரையில் விழுந்த ரத்தம் காய்வதற்குள் நெற்றியில் ஏற்பட்ட காயத்தின் வடுகூட மறைந்தது. வலியும் பறந்தது, எந்த மருந்தும் இல்லாமல் அன்றோடு அவருக்கு வருகின்ற மயக்கமும் மறைந்தது. ஆனந்தப் பெருவாழ்வு வாழும் அவர், சுவாமிகளை தெய்வத்தின் அவதாரம் என உணர்ந்தார்.

வி.ஐ.பி களான நண்பர்கள் இருவர் இறைவனின் திருமகனார் யோகி ராம்சுரத் குமார் சுவாமிகளின் தீவிர பக்தர்கள். ஒரு முறை இருவரும் அவரை சந்திக்க திருவண்ணாமலை சென்றனர். அன்று தைப்பூசம் இருவரும் யோகியை தரிசனம் செய்தனர். அன்று தைப்பூசம் இருவரும் யோகியை தரிசனம் செய்தனர். திடீரென யோகி அவர்கள் இருவரிடமும் ”நீங்கள் உடனே கசவனம்பட்டிக்கு செல்லுங்கள், உங்கள் இருவருக்கும் அபூர்வ காட்சி கிடைக்கும். அது யாருக்குமே கானக்கிடைக்காத காட்சி என்றார்கள்.



இரவு நேரம்! இருவரும்  கசவனம்பட்டியை அடைந்தார்கள். முத்தாலம்மன் ஆலய வாசலில் இருந்த சுவாமிகளை வணங்கி, தாங்கள் வாங்கிவந்த பழங்களைக் கொடுத்தனர், அதில் ஒன்றிரண்டை சுவைத்த சுவாமிகள் கோயிலின் உள்ளே சென்று கருவறையில் அமர்ந்தார்கள். நண்பர்கள் இருவரும் பார்க்க, அங்கே நம் கசவன சுவாமிகள் கையிலே வேலேந்தி மயில் மீது அமர்ந்த கோலத்தில் பால முருகனாய் சில நிமிடம் காட்சி தந்தார்கள். இந்த இறை தரிசனத்தால் மெய்சிலிர்த்த இருவரும் பெரும் பேறு அடைந்தனர்.

கசவனம்பட்டி சுவாமிகளைப்பற்றி அறிந்த வள்ளல் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கசவனம்பட்டிக்கு வந்து மூன்று நாட்கள் காத்திருந்து நம் சுவாமிகளை சந்தித்து விட்டு சென்றார். வாரியார் கொடுத்த டீயை வாங்கி சுவைத்த சுவாமிகள், தலையை ஆட்டிவிட்டு சென்றார்.

~ பன்னீர்செல்வம்




KABA SURA KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties


Call: 95004 95008

# மேஷம்

- புதிய எண்ணங்கள் உதயமாகும்.
- பிறருடனான உங்கள் உறவு சுமூகமாக இருக்கும்.
- பணியில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.
- நீங்கள் மிகவும் கடுமையாக உழைப்பீர்கள்.
- உங்கள் பணிகளை விரைவாகவும் முடிப்பீர்கள்.
- நீண்ட நாட்களாக விரும்பிய சொத்துக்களை வாங்குவீர்கள்.
- வியாபாரத்தையும் மேம்படுத்திக் கொள்ளும் எண்ணங்களை வளர்த்துக் கொள்வீர்கள்.
- உங்களுடன் பழகுபவர்கள் தங்களின் சொந்த வாழ்விற்கான ஆலோசனைகளை உங்களிடம் கேட்டுப் பெறுவார்கள்.
- சிறிய அளவிலான உடல் உபாதைகள் என்றாலும் உடனே கவனம் செலுத்தி சரி செய்து கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தைச் சிறந்த முறையில் பாதுகாத்துக் கொள்ள முடியும்.
- பிரியமானவரிடம் காதலை தாமதம் ஏதும் இன்றி வெளிப்படுத்த இது மிகவும் ஏதுவான மாதம் ஆகும்.
- உங்களில் சிலருக்கு திடீரென்று வாழ்க்கைத்துணை அமைய வாய்ப்புள்ளது.
- இது மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும்.
- வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.
- கல்வியைப் பொறுத்தவரை மேஷ ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் மிகச் சிறந்த மாதமாக இருக்கும்.
- நீங்கள் விரும்பும் வகையில் கல்வியில் வெற்றி காண்பீர்கள்.
- பதட்டம் அதிகரிக்கும்.
- பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதற்கு நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- பொறுமையை கடைபிடிக்க வேண்டியது மிகவும் அவசியம்

வேலையில் வெற்றி பெற : கணபதி பூஜை

நிதிநிலை மேம்பட : புதன் பூஜை




# ரிஷபம்

- உங்கள் திறமைகள் மூலம் நீங்கள் முன்னேறுவீர்கள்.
- நீங்கள் மன அமைதி வேண்டியும் புத்துணர்ச்சி பெறவும் புனித யாத்திரை மேற்கொள்வீர்கள்.
- செலவுகளும் கட்டுக்குள் இருக்கும்.
- உற்சாகமாக செயலாற்றுவீர்கள்.
- உங்கள் மனதில் நீங்கள் உண்மையான அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- குடும்பத்தில் காணப்படும் மகிழ்ச்சியான சூழல் மனதிற்கு திருப்தி அளிக்கும்.
- உங்களிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு நீங்கள் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.
- உங்களுக்கு வரவேண்டிய சில கடன் நிலுவைகள் நீங்கள் எதிர்பார்க்காத நேரத்தில் உங்களுக்கு வந்து சேரும்.
- உங்கள் வியாபரத்தைப் பெருக்க நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றி உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள்.
- பணிகளை முடிக்க நீங்கள் அதிக நேரம் செலவு செய்து பணியாற்ற வேண்டி இருக்கும்.
- உங்கள் மேற்பார்வையில் பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழல் இருக்கும்.
- வியாபாரம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்திற்கு நீங்கள் முக்கியத்துவம் அளித்து பங்கு கொள்வதன் மூலம் நன்மை பெறலாம்.
- சில கடன் நிலுவைகள் நீங்கள் எதிர்பார்க்காத நேரத்தில் உங்களுக்கு வந்து சேரும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.
- உயர் கல்வி படிக்கும் மாணவர்கள் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம்.

பணியில் முன்னேற்றம் காண : சனி பூஜை

ஆரோக்கியமான வாழ்விற்கு : சூரிய பூஜை



# மிதுனம்

- விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும் மாதமாக இருக்கும். கடின உழைப்பிற்கு அங்கீகாரமும் பெறுவீர்கள்.
- பல பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.
- வெளிப்படையாகப் பேசுவீர்கள். அதையே செயலிலும் காட்டுவீர்கள்.
- உறவினர் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.
- ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.
- துணையின் இதயம் கவரும் வகையில் நடந்து கொள்வீர்கள்.
- வாழ்க்கைத் துணை உங்களிடம் அன்பை வெளிப்படுத்துவார். வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.
- திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடை பெறும்.
- திதநிலை சிறப்பாக இருக்கும். • வங்கிக் கணக்கில் இருப்பு நிலை உயரும்.
- சொந்த விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள பணத்தை செலவு செய்வீர்கள்.
- பணியிடத்தில் பாராட்டையும் ஊதிய உயர்வையும் பெறுவீர்கள்.
- மேலதிகாரிகள் மீது நம்பிக்கை வைத்து புதிய பணிகளை வழங்குவார்கள்.
- வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள, சமூக தகவல் தொடர்புத் திறனை மேம்படுத்திக் கொள்வது உதவிகரமாக இருக்கும். • உணவு முறையில் கவனம் வேண்டும்.
- ஆரோக்கியம் சிறப்பாக இருந்தால் தான் வியாபாரத்தில் கவனம் செலுத்த முடியும்.
- சிலர் கால்சியம் குறைபாடு காரணமாக மூட்டு வலிக்கு ஆளாவீர்கள்.
- நீண்ட தூரப் பயணங்கள் உடலுக்கு அசதி ஏற்படுத்தும் என்பதால் அதனை தவிர்ப்பது நல்லது.
- பாடங்களை நன்கு புரிந்து கொண்டு முயற்சிக்கு வழி வகுத்துக் கொள்வீர்கள்.
- நடப்பு நிகழ்வுகளை நன்கு அறிந்து கொள்வது உதவிகரமாக இருக்கும்.

வேலையில் வெற்றி காண : பிருஹஸ்பதி பூஜை

ஆரோக்கியமான வாழ்விற்கு : புதன் பூஜை




# கடகம்

- எந்தவொரு செயலிலும் மன அமைதியுடன் செயல்படுவீர்கள்.
- சிறந்த வகையில் முடிவுகளை எடுப்பீர்கள்.
- இது தொழில் அபிவிருத்திக்கு மிகவும் உதவியாக இருக்கும்.
- அதன் மூலம் தனிப்பட்ட முறையில் வளர்ச்சி காண்பீர்கள்.
- புதிய நட்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.
- ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.
- காதல் வாழ்க்கை சுமாராக இருக்கும்.
- காதலைப் பொறுத்தவரை அவசர முடிவுகள் எதுவும் எடுக்காதீர்கள்.
- கவனமாக நடந்து கொள்ளுங்கள்.
- வருமானம் ஓரளவு சீராக இருக்கும்.
- நண்பர்களுக்கு கடனாக கொடுத்த தொகையை இந்த மாதம் வசூல் செய்வீர்கள்.
- சில சமயங்களில் கொடுக்கப்பட்ட வேலையில் கவனம் செலுத்த முடியாத அளவில் மனநிலை இருக்கும்.
- அளிக்கப்பட்ட பணிகளை உரிய நேரத்தில் முடித்து அளிக்க விரைந்து செயல்பட வேண்டியிருக்கும்.
- முயற்சியின் மூலம் சில நல்ல பலன்களைக் காண்பீர்கள்.
- முடித்து அளிக்கும் பணிகளில் கூடுதல் செயல் திறனை வாடிக்கையாளர்கள் எதிர்பார்ப்பார்கள்.
- திட்டங்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவிகரமானதாக இருக்கும்.
- தேக வலிமை கூட இந்தப் பருவத்தில் கிடைக்கும் பழங்களை உண்ணுங்கள்.
- உங்களின் சில விருப்பங்கள் நிறைவேறக் காண்பீர்கள்.
- கல்வியில் மேன்மை பெற ஆரம்பத்தில் சில சவால்களை சந்திக்க நேர்ந்தாலும் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் நிச்சயமாக வெற்றி காண்பீர்கள்
- சோம்பலை விட்டுத் தள்ளுங்கள். அது முன்னேற்றத்தைத் தடை செய்யும்.
- வெற்றியை தாமதமாக்கும்.

ஆரோக்கியமான வாழ்விற்கு : ஸ்ரீ வைத்தியநாத பூஜை

கல்வியில் வெற்றி காண : சரஸ்வதி பூஜை



# சிம்மம்

- குடும்ப வாழ்க்கை சீராக சென்றாலும்,
- பணி செய்யும் அன்பர்கள் சிறப்பாக செயலாற்றுவதன் மூலம் பணியில் சிறந்த முன்னேற்றம் காண இயலும்.
- பொது விழாக்கள் மற்றும் சமூக விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் சமூகத்துடனான தொடர்பு மேம்படும்.
- ஆரோக்கியத்தில்  கவனம் செலுத்த வேண்டும்.
- காதலைப் பொறுத்த வரை  மகிழ்ச்சி அளிக்கும் மாதமாக இருக்கும்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு தகுந்த வரனை தெரிவு செய்ய வேண்டியது அவசியம்.
- சமூகத் தகவல் தொடர்புகள் அதிகரிக்கும். • நிதிநிலையில்  ஆதாயம் காண்பீர்கள்.
- வாங்கிய கடனையும் திரும்ப செலுத்த ஆரம்பிப்பீர்கள்.
- சிலர் அசையாச் சொத்துக்களை வாங்குவீர்கள்.
- திறமைகளை வெளிப்படுத்தி ஆக்கப்பூர்வமாக பணியாற்ற முயலுங்கள்.
- அலுவலக  இரகசியங்களை காப்பதில் கவனமாக இருங்கள்.
- தொழில் நடவடிக்கைகள், முன்னேற்றப் பாதையில் செல்லும் வகையில் சாதகமாக இருக்கும். சிறந்த பலன்களைக் காண இயலும்.
- கிரகங்களின் அமைவு நிலை காரணமாக, பொறுமை இழக்க வேண்டிய சில சந்தர்ப்பங்கள் ஏற்படும். • எந்த நேரத்திலும் எல்லா விஷயங்களிலும் பொறுமை காக்க வேண்டும்.
- தொழில் நிபுணர்களுக்கு சிறந்த பலன் தரும் மாதமாக இருக்கும்.
- பணியிடத்தில் சுமுக உறவு மேற்கொள்ள முயலுங்கள்.
- எல்லாவற்றையும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்காமல் நேர்மறை எண்ணத்துடன் இருக்க முயலுங்கள். அப்பொழுது தான் உடல் ஆரோக்கியத்தை  பாதுகாத்துக் கொள்ள முடியும்.
- மாணவர்களின் கல்வி சீராகச் செல்லும். தனிப்பட்ட  ஒழுக்கத்தில் கவனம் செலுத்துங்கள்

வேலையில் வெற்றி பெற : சனி பூஜை

நிதிநிலை மேம்பட : புதன் பூஜை

# கன்னி



- அசையாச் சொத்துக்களை வாங்க வேண்டும் என்ற நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.
- பணியிடத்தில் அளிக்கப்படும் சவாலான பணிகளைக் கூட வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். லாபமும் அடைவீர்கள்.
- திருமண வாழ்வு இனிமை நிறைந்ததாக இருக்கும். • சில தேவையற்ற செலவுகளைச் செய்வீர்கள்.
- பெரிய அளவிலான உடல் உபாதைகள் ஏதும் ஏற்படாது என்றாலும் சில சின்னச் சின்ன உடல் அசௌகரியங்களை சந்திப்பீர்கள்.
- உறவை வலுப்படுத்திக் கொள்வீர்கள். • செயல்கள் யாவும் சிறந்த நல்ல பலன்களை அளிக்கும்.
- விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.
- நிதி சம்பந்தமாக மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையும் சாதகமான பலன்களை பெற்றுத் தரும்.
- சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள். ஆனால் சொத்துக்களை வாங்குவதற்கு முன், சொத்து சம்பந்தமான ஆவணங்களை சரி பார்த்து வாங்க வேண்டியது மிகவும் அவசியம்.
- பணியிடத்தில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பீர்கள்.
- பணிகளை சக பணியாளருக்கு பிரித்து அளிப்பீர்கள்.
- அவர்களும் சரியான நேரத்தில் பணிகளை முடித்து அளிப்பார்கள்.
- எண்ணங்களுக்கு செயல் வடிவம் அளிப்பீர்கள்.
- வாடிக்கையாளர்களுடன் நல்ல உறவை பராமரிப்பீர்கள். கூடுதல் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள நேரும். என்றாலும் விரைந்து பணியாற்றுவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்புள்ளது.

உணவு முறையில் அதிக கவனம் தேவை.

அலட்சியமாக செயல்படாமல் எதிர் கால நலன் கருதி கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

வேலையில் முன்னேற்றம் காண : புதன் பூஜை

நிதிநிலை மேம்பட : சூரியன் பூஜை




# துலாம்

- சோதனைக் காலமாக இருக்கும்.
- சஞ்சலமான எண்ணங்கள் காரணமாக பணிகளை முடிப்பதில் சிரமம் இருக்கும்
- முயற்சிக்கேற்ற பலனை காண்பீர்கள்.
- தோற்றம் மற்றும் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள்.
- தவறான புரிந்துணர்வு வருத்தத்தை ஏற்படுத்தும்.
- காதல் துணை தவிர்ப்பது அல்லது உறவை துண்டித்துக் கொள்வது என்ற வகையில் நடந்து கொள்ள வாய்ப்பு உள்ளது.
- பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதற்கிணங்க பொறுமைக்கு நல்ல பலனை துணையிடம் இருந்து பெறுவீர்கள்.
- பொருளாதாரம் மற்றும் சொத்துக்கள் குறித்த கவலை அதிகம் இருக்கும்.
- பண விஷயங்களில் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும். வருமானத்தை விட செலவுகள் அதிகம் இருக்கும்.
- பிறரை நன்கு புரிந்து கொள்ள அவர்கள் கோணத்தில் இருந்து எதையும் ஆராய்ந்து பாருங்கள்.
- சில சமயம் முயற்சிகளுக்கு உகந்த பலன்கள் கிடைக்காமல் போகலாம்.
- கடினமாக உழைக்க வேண்டிய மாதம் இது.
- நடந்து முடிந்து போன செயல்கள், அல்லது சந்தித்த பாதகமான விளைவுகளைப் பற்றி கவலைப் • படாதீர்கள்.
- ஆபத்து ஏற்படுத்தும் எந்த ஒரு புதிய வாய்ப்பையும் தெரிவு செய்யாதீர்கள்.
- சில மனக் கவலைகள் இருக்கும்.
- ஆசிரியர் மற்றும் விரிவுரையாளர்களிடம் இருந்து பல நுணுக்கமான விஷயங்களை கற்றுக் கொள்ள எந்த மாதம் ஏதுவாக இருக்கும்.
- கல்வியில் சிறந்து விளங்குவீர்கள்.
- புத்துணர்ச்சி பெற நண்பர்களுடன் சிறிது நேரத்தை செலவிடுங்கள்.
- தேவையற்ற விஷயங்களைப் பேசி நன்மதிப்பை கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

நிதிநிலை மேம்பட : அங்காரக பூஜை

திருமண உறவில் நல்லிணக்கம் காண : குரு பூஜை

# விருச்சிகம்




- ஆசை மற்றும் அபிலாசைகள் நிறைவேறும் மாதமாக இருக்கும்.
- பன்முகத் திறனை பயன்படுத்தி நேரத்தை சரியாகப் பயன்படுத்துவீர்கள்.
- • குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும்.
- குடும்ப அங்கத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.
- இது மகிழ்ச்சியை அளிக்கும்.
- ஆன்மிகம் மற்றும் மறை கலைகளை அறிந்து கொள்வதில் அர்ப்பணிப்பு உணர்வுடனும் ஊக்கத்துடனும் முனைவீர்கள்.
- வீட்டுக்குத் தேவையான ஆடம்பர பொருட்களை வாங்குவீர்கள்.
- அதன் மூலம் வாழ்க்கை அந்தஸ்து உயரும். • அதில் பெரிய தொகையை முதலீடு செய்வீர்கள்.
- தேவையற்ற விஷயங்களில் மூக்கை நுழைத்து தவறான போக்கில் நடந்து கொள்வீர்கள்.
- உங்களுக்கென ஒரு பாதை வகுத்துக் கொள்வீர்கள்.
- வியாபாரம் செய்யும் அன்பர்கள் புதிய தொழில் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வார்கள்.
- கூட்டுத் தொழில் புரிபவர்கள் கூட்டாளிகளின் தேவைகளை நிறைவேற்றுவார்கள்.
- உணர்ச்சி வசப்படாமல் பொறுமையுடன் செயல்பட வேண்டிய நேரம் இது.
- உடல் வலி, வாய்யு தொல்லை போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளது.
- அதனை உடனடியாக கவனிக்க வேண்டும்.
- பச்சைக் காய்கறிகள் பால் பழங்கள் போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- பொதுவாகவே விரைந்து கற்கும் இயல்பு உடையவர்கள்.
- சக மாணவருக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பீர்கள்.
- அதன் மூலம் அவர்கள் கல்வியில் சிறந்து விளங்க உதவி புரிவீர்கள்.
- இது அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

வேலையில் முன்னேற்றம் காண : சூரியன் பூஜை

திருமண உறவில் நல்லிணக்கம் காண : குரு பூஜை

# தனுசு



- வளர்ச்சி தரும் மாதமாக இருக்கும்.
- வேலை மாறும். புதிய வாய்புகள்  காத்திருக்கின்றது.
- உடன் பிறப்புகளுடன்  நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- குடும்பத்தில் புதிய வரவு ஒன்று இருக்கும்.
- அது குழந்தைப் பேறாகவும் இருக்க வாய்ப்பு உள்ளது.
- விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். அதன் மூலம் மனத்திற்கு திருப்தி கிடைக்கும்.
- ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நேர்மறை போக்கு காரணமாக  துணையுடனான உறவு நல்லுறவாக இருக்கும்.
- திருமணம் ஆகாத தனுசு ராசி அன்பர்களுக்கு திருமணம் நடக்கும்.
- கடந்த கால முயற்சிகளுக்கு  சிறந்த பலன்களைக் காண்பீர்கள்.
- நெருங்கிய நண்பர் ஒருவர் உங்களிடம் கடன் கேட்டு வருவார். அதனை உரியநேரத்தில் திரும்ப அளிப்பதாக வாக்கும் அளிப்பார்.
- பணியிடத்தில்  மேலதிகாரிகள் அளிக்கும் வேலைகளை உரிய நேரத்தில் முடித்து அளிப்பீர்கள்.
- உங்களில்  தற்போது பார்க்கும் பணியை விட சிறந்த வாய்ப்பு கிடைக்கும். அதனை நன்கு பயன்படுத்திக் கொள்வதன் மூலம்  புதிய வேலையை தக்க வைத்துக் கொள்ள முடியும்.
- புதிய தொழில் வாய்ப்புகள் உங்களை நாடி வரும்.
- வியாபாரம் சம்பந்தமான பயணம் ஒன்றை  மேற்கொள்வதற்கான வாய்ப்பும் உள்ளது.
- மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலிலும் வெற்றியைக் காணும் மாதம் இது.
- தொழில் சம்பந்தமாக பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.
- செயலுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.
- ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதற்கு முன்பு  ஏதாவது மருந்து எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்றால் அதனைத் தொடருங்கள்.
- மாணவர்கள் திட்டமிட்டபடி படித்து முடிப்பார்கள்.
- பொது ஜனத் தொடர்பு மேற்கொள்ள ஏதுவானதாக இருக்கும். ஆனால் அவசர முடிவுகளை எடுக்காதீர்கள்.

நிதிநிலை மேம்பட : சனி பூஜை

திருமண உறவில் நல்லிணக்கம் காண : அங்காரக பூஜை

# மகரம்



- சாதகமான பலன்களைப் பெறுவது கடினம். செயல்கள் யாவும் இனிதே நிறைவேற கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.
- வீட்டில் அன்றாட பணிகளை செய்வதில் கூட சில சிரமங்களை சந்திப்பீர்கள்.
- சரியான நோக்கத்தை மற்றவர்கள் புரிந்து கொள்ளவோ அல்லது கூறுவதை ஒத்துக் கொள்ளவோ தயக்கம் காட்டுவார்கள்.
- மனதில் ஏற்படும் வருத்தங்கள், பதட்டமான நிலை மற்றும் சரியற்ற உணவுமுறை காரணமாக ஆரோக்கியம் பாதிப்பிற்கு உள்ளாகும்.
- காதலிக்கும் நபரின் உள்நோக்கம் அறிந்து உறவை தொடர்வது உசிதம். இவ்வாறு அறிந்து கொள்வதன் மூலம் காதல் உறவை திருமண பந்தமாக மாற்ற இயலும்.
- உண்மையான காதலை துணை புரிந்து கொள்ள காலமே நல்ல மருந்தாக செயல்படும்.
- பிறரிடம் இருந்து கடன் வாங்காதீர்கள்.
- வரிகள் கட்டுவதில் அலட்சியமாக இருக்காதீர்கள். இல்லாவிடில் கூடுதலாக அபராதத் தொகை கட்ட வேண்டி வரும்.
- சொத்தைவிற்று கடனை அடைக்க விரும்பும் ஆசை நிறைவேறும்.
- பணியிடத்தில் போதுமான அங்கீகாரம் கிடைக்காது. இது ஏமாற்றத்தை அளிக்கும்.
- பிறர் செய்யும் வேலைகளுக்கு பொறுபேற்றுக் கொள்ளாதீர்கள்.
- பணிகளை ஆற்றுவதில் தெளிவுடன் செயல்படுங்கள்.
- நிறை குறைகளை ஆராய்ந்து லாபம் காண்பதற்கு முயல ஏதுவாக இருக்கும்.
- எதிர்ப்பார்க்கும் லாபங்கள் கிடைப்பது கடினம்.
- தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற மதிப்பு மரியாதை எதிர்பார்க்க முடியாது.
- பொறுமையுடன் செயல்பட்டால் இந்தச் சூழ்நிலையில் இருந்து விடுபடுவீர்கள்.
- உடற் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.
- மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க அதிக முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

மிகவும் போராடி வெற்றி காண்பீர்கள்.

ஆரோக்கியமான வாழ்விற்கு : ஸ்ரீ வைத்தியநாத பூஜை

வேலையில் முன்னேற்றம் காண : அங்காரக பூஜை

# கும்பம்



- நன்மையும் தீமையும் கலந்த பலன்கள் கிடைக்கும்.
- செய்யும் தவறுகள் காரணமாக சில பிரச்சினைகளை சந்திக்க நேரும்.
- பிறர் மனம் புண் படாத வகையில் பேசுவது நல்லது.
- சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் செயலாற்றுவீர்கள்.
- பிற குடும்ப உறவுகளிலும் சில சலசலப்புகள் காணப்படும்.
- தொழில் அல்லது பணிகள் சுமுகமாக நடைபெறுவதில்சில தடைகளும் தாமதங்களும் காணப்படும்.
- ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் சிற்சில சமயங்களில் ஞாபக மறதி காரணமாக சோர்வுடன் காணப்படுவீர்கள்.
- பொறுமை காப்பதன் மூலம் உறவுகளை சிறந்த முறையில் பராமரிக்கலாம்.
- லௌகீக இன்பங்களை நாடி அடைவதற்கு ஏற்ற மாதமாக இருக்காது.
- கடன்களை அடைக்க முயற்சி செய்யுங்கள்.
- பண விஷயத்தில் யாருக்கும் வாக்கு அளித்து மாட்டிக் கொள்ளாதீர்கள்.
- அளிக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முயலுங்கள்.
- தவறு நேரா வண்ணம் கவனமாக இருங்கள்.
- ஆக்கப்பூர்வமாக பணியாற்ற முயலுங்கள். பிறரைப் பற்றி வதந்தி பேசாதீர்கள்.
- அதிக லாபம் எதிர்பார்ப்பீர்கள் என்றாலும்.
- எதிர்பார்க்கும் அளவிற்கு லாபம் காண இயலாது.
- கூட்டுத் தொழில் செய்பவராக இருந்தால் கூட்டாளிகளை கண்காணிக்க வேண்டும்.
- எனவே அந்த எண்ணத்தை சிறிது காலத்திற்கு தள்ளிப் போடுங்கள்.
- சிறப்பாகவும் ஆக்கப்பூர்வமாகவும் பணியாற்றுவீர்கள்.
- உற்சாகம் இழந்து பணிகள் மந்தமாக வாய்ப்பு உள்ளது.
- கீழ் பணி புரிபவர்கள் தகுந்த ஒத்துழைப்பு அளிக்க மாட்டார்கள்.
- கவனமுடன் நடந்து கொள்ள வேண்டும்.
- புரதச் சத்து மிகுந்த உணவு வகைகளை உட்கொள்வதன் மூலம் உடல் உபாதைகள் ஏற்படாமல் காத்துக் கொள்ளலாம்.

வேலையில் முன்னேற்றம் காண : சனி பூஜை

நிதிநிலை மேம்பட : கேது பூஜை

# மீனம்



- சிறந்த பலன் அளிக்கும் மாதம்.
- மேற்கொள்ளும் செயல்கள் எல்லாவற்றிலும் வெற்றி காண்பீர்கள்.
- தகவல் தொடர்புத் திறன் நம்பிக்கை அளிக்கும். நிலுவையில் வைத்திருக்கும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அவற்றை முடியுங்கள்.
- வாழ்க்கையில் மறக்க முடியாத மகிழ்ச்சியான தருணங்களாக அமையும்.
- மனதில் அகந்தைக்கு இடம் அளிக்காதீர்கள்.
- உறவினர்கள் காதல் உறவுக்கு எதிர்ப்பும் மறுப்பும் தெரிவிப்பார்கள்.
- அதன் மூலம் பெற்றோரின் அனுமதி பெற்று காதலை திருமண உறவாக மாற்றிக் கொள்ள இயலும்.
- நீண்ட கால முதலீடுகளை மேற்கொள்ள ஏற்ற மாதமாக இருக்கும்.
- அசையாச் சொத்து பராமரிப்பு வகையில் செலவினங்களை சந்திக்க நேரும்.
- பணியிடத்தில் சிறப்பாக செயலாற்றி ஊக்கத் தொகை பெறுவார்கள்.
- அலுவலக பணி நிமித்தமாக பயணங்களை மேற்கொள்ள நேரும்.
- தொழில் குறித்து தீட்டும் திட்டங்கள் யாவும் சிறப்பாக நிறைவேறும்.
- புதிய தொழில் கிடைக்கும்.
- கூட்டுத் தொழில் செய்பவராக இருந்தால் வேலை விரைந்து முடிவு பெற கூட்டாளிகளையும் இணைத்துக் கொண்டு பணியாற்றுங்கள்.
- ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பீர்கள்.
- வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலமும் மகிழ்ச்சி இரட்டிப்பாகும்.
- மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.

வேலையில் முன்னேற்றம் காண : குரு பூஜை

நிதிநிலை மேம்பட : அங்காரக பூஜை

திருமண உறவில் நல்லிணக்கம் காண : சந்திரன் பூஜை

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்